தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1977 ஜூலை 28.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

விவசாயத்திற்கு பயன்படும் மின்சாரக் கட்டணம்.

* வினா 2.—திரு. வி. கே. கோதண்டராமன், திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கான கட்டணத்தைக் குறைக்கும்படி கோரி விவசாயிகள் கிளர்ச்சி செய்து வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) விவசாயிகளின் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. இதற்கிடையில் விவசாயிகள் போராட்ட நடவடிக்கைகளை கைவிட்டு மின் கட்டணங்களை 1977-ம் ஆண்டு ஜூலை மாத இறுதிக்குள் செலுத்தும்படி அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற காரணத்திற்காக பட்ஜெட்டில் பாசனக் கட்டணம் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு பாறைப் பகுதிகளில் வெடி மருந்து வைத்து உடைத்து, கிணறு எடுத்து, அதற்குமேல் பம்புசெட்டு வைத்து மின்சார கனெக்ஷன் கொடுத்து விவசாய உற்பத்தி பண்ணக்கூடிய அந்த விவசாயிகள் மாதம் ஒன்றுக்கு நூற்றுக்கணக்கான ரூபாய் கட்டவேண்டியிருக்கிறது. அந்த சிறு விவசாயிகளுக்காவது மின் சாரக் கட்டணத்தை உடனடியாகக் குறைக்க ஏற்பாடு செய்யப் படுமா?

[1977 ஜூலை 28

மாண்புமிகு திரு.ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் வேளாண்மைத் துறையில் செலவிடுகிற மின்சாரத்தினால் ஆண்டு ஒன்றுக்கு 38 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. உற்பத்திச் செலவு யூனிட் ஒன்றுக்கு 40 காசு என்றாலும், இப்போது 20 காசு என்ற அளவில் தான் விவசாயிகளுக்கு எல்லாக் கட்டணங்களும் சேர்ந்து அமைகிறது. ஏற்கனவே வேளாண்மைத் துறையில் மின்சாரத்தைப் பயன்படுத்துவதற்குச் சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இருப்பினும் இந்த அரசு எந்த அளவுக்கு ஏழை விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கலாம் என்பதைப்பற்றி ஆராயும்.

திரு. என். கிட்டப்பா :—சில இடங்களில் வேளாண்மைக் கிணறுகள் மிகவும் ஆழமாக இருக்கின்றன. அதன் காரணமாக இரண்டு பம்பு செட்டுகள் போட்டு வேலை செய்யவேண்டியிருக்கிறது. அத்தகைய விவசாயிகளுக்காவது மின்சாரக் கட்டணத்தை குறைக்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்துள்ள யோசனை கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. சி. கோவிந்தராசன் : விவசாயிகளுக்கு எல்லாக் கட்டணமும் சேர்ந்து யூனிட் 20 காசுக்குக் கொடுப்பதனால் மின்சார வாரியத்திற்கு 38 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது என்று சொன்னார்கள். தொழிலதிபர்களுக்குக் கொடுக்கக் கூடிய மின்சாரத்திற்கு 2½ பைசாவில் இருந்து 6 பைசாவுக்கு மேல் கிடையாது. விவசாய அபிவிருத்திக்கும் இதுபோல மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே இதர மாநிலங்களை நாம் பார்க்கிறபோது, நம் மாநிலத்தில் தொழில்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிற கட்டணம் அதிகமானது. இன்னும் இங்கே அதிகமாக்கினால் தொழில்மயமாக்குவதில் சங்கடம் ஏற்படும்.

திரு. வ. சின்னசாமி : சாதாரணமாக ப்யூஸ் காரியர் போடுவதற்கு 6 ரூபாயிலிருந்து 12 ரூபாய் வரை கட்ட வேண்டியிருக்கிறது. அது குறைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதுபற்றி அரசு இன்னும் முடிவு எடுக்கவில்லை.

1977 ஜூலை 28]

திரு. மு. கருணுநிதி : அமைச்சர் அவர்கள் எல்லா மாநிலத்தையும்விட நம் மாநிலத்தில் தொழில்களுக்கு மின் கட்டணம் அதிகமானது என்று குறிப்பிட்டார். ஆளுங் கட்சித் தேர்தல் அறிக்கையில் மிகக் குறைவானது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த முரண்பாடு ஏன் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இத்தகைய தகவல் என்னிடத்தில் இல்லை. அப்படி இருக்குமாளுல் அதுபற்றி நிச்சயம் பரிசீலிக்கப்படும்.

திரு. என். வரதராஜன் : இந்த மின் கட்டணத்தைக் கட்டாது ஒரு கிளர்ச்சி கடந்த நாலு ஐந்து மாதங்களாக நடந்து வருகிறது. அப்படிக் கட்டாமல் பாக்கித் தொகை உயர்ந்து இருப்பதால் ஒரே தடவையில் கட்ட வேண்டும் என்று நிர்ப்பந்தித்தால் சிக்கல் ஏற்படும். எனவே சுமார் ஆறு மாதத் தவணையில் அதைக் கட்ட ஏற்பாடு செய்யவும், அதோடு இந்த அவசர காலத்தில் திடீரென்று உயர்த்தப்பட்ட இந்த மின் கட்டணத்தைக் குறைத்துவிட்டு படிப்படியாக உயர்ந்து வருகிற முக்கியமான தேவைகளை கவனத்தில் எடுத்துக் கொண்டு கீழ்த்தட்டு விவசாயிகளுக்கு நிவாரணம் மேலே செல்லச் செல்ல அதிகக் கட்டணம் வாங்கும் இந்த முயற்சியைப் பின்பற்ற அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்த யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : அவசரகாலத்தில் வேலையில் இருந்து நீக்கப்பட்டவர்களுக்கும் இன்னும் பழிவாங்கப்பட்ட பலர் திரும்ப எடுத்துக்கொள்ளப்பட்டு அவர்களுக்கெல்லாம் நிவாரணம் கொடுக்க வேண்டும் என்றும் உத்தரவு போட்டிருக்கிருர்கள். அதேபோல் அவசரகாலத்தில் உயர்த்தப்பட்டிருக்கக்கூடிய இந்த மின் கட்டணம் காரணமாக சிறு விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிருர்கள் என்ற கண்ணேட்டத்தோடு அவர்களுடைய கோபத்திற்கும் சாபத்திற்கும் ஆளாகாமல் சிறு விவசாயிகளுக்கான மின் கட்டணம் உடனடியாகக் குறைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நான் முன்பே சொன்னேன். விவசாயத்திற்கான மின் கட்டணத்தைப் பொறுத்தவரையில் எந்த அளவிற்கு விவசாயிகளுக்கு நன்மை பயக்கக்கூடிய அளவில் கட்டணத்தைக் குறைப்பது என்பது பற்றி இந்த அரசு ஆராய்ந்து வருகிறது. தேர்தல் அறிக்கையில் கூட விவசாயிகளுக்கு இந்தக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்பதை இந்த ஆளும் கட்சி ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனல் அதே நேரத்தில் இன்று பலயிடங்களில் விவசாயத்திற்கான

[1977 ஜூலை 28

கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்பதற்கான ஆர்ப்பாட்டங்களில் சிலபேர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்கான போதிய அவகாசம் எங்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை என்பதால் அது குறித்து நடவடிக்கை எடுக்கவில்லையே தவிர விவசாயத்திற்கான கட்டணத்தைக் குறைக்கமாட்டோம் என்ற பொருள் அல்ல.

திரு. எஸ். ஆர். ராதா : மின் கட்டணத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்கிற நேரத்தில் இப்போது கட்டணம் வசூலிக்கிற முறையில் ஊருக்கு ஒருவிதமாக சென்னையில் ஒரு காலத்திலும், கும்பகோணத்தில் ஒரு நேரத்திலும் இப்படி மாநிலத்தில் இருக்கிற பல்வேறு ஊர்களில் தேதிகள் வித்தியாசமாக இருப்பதை மாற்றுவதற்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. மு. கருணாநிதி : ஆளும் கட்சியினுடைய தேர்தல் அறிக்கையில் விவசாயிகளுக்கான மின் கட்டணத்தைக் குறைப்போம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த அறிக்கையில் அந்த வாசகத்திற்கு மேலே உள்ள இரண்டு வரிகளில் இங்கே ஆலைகளுக்கு மின் கட்டணம் குறைவாக இருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. அதை நான் கேட்கும்போது தகவல் இல்லை என்று குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பற்ற மாநிலங்களைப் பொறுத்தவரையில் இங்கே தொழில்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிற கட்டணம் அதிகமாக இருக்கிறதா குறைவாக இருக்கிறதா என்பது வேறு விஷயம். ஆனால் நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் சில தொழில்களுக்கு 'கன்செஷனல் டாரிப்' சலுகைகள் என்ற அடிப்படையில் சில கட்டணங்கள் தரப்பட்டிருக்கிறது. அவ்வளவு குறைவாக அந்தத் தொழில்களுக்கு கட்டணங்கள் அளிக்கப்படவேண்டியதில்லை என்பது இந்த அரசின் திட்டவட்டமான கொள்கை.

திரு. மு. கருணாநிதி : அப்படியானால் வருங்காலத்தில் அந்தச் சலுகைகள் எல்லாம் ரத்து செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஏற்கனவே ஏராளமாக வழங்கப்பட்டிருக்கிற சலுகைகள் பற்றி அரசு ஆய்ந்து வருகிறது. அவ்வளவு சலுகைகள் தேவையில்லை என்பது அரசாங்கத்தின் கணிப்பாகும்,

1977 ஜூலை 28]

திரு. எஸ். ஜே. இராமசாமி : இப்போது விவசாயிகளுக்கான மின்கட்டணத்தைப் பார்த்தால், அந்த பில்லைப் பார்த்தால் இவ்வளவு யூனிட்டுகளுக்கு இவ்வளவு தொகை என்று போடப் பட்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. பின்னர் சர்சார்ஜ் அது, இது என்று ஏகப்பட்ட சார்ஜ்களைச் சேர்க்கிறார்கள். அதைக் குறைப்பதற்கு அரசிடம் ஏதாவது திட்டமிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : எல்லாம் சேர்ந்து தான் அந்த மின்கட்டணம்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : எங்கள் பகுதியில் நிறையக் கிணறுகள் தோண்டப்பட்டு மின் இணைப்புக் கொடுக்காமல் இருக்கிறார்கள். அவற்றிற்கு மின் இணைப்புக் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தனிக் கேள்வி போடவும்.

திரு. என். சங்கரய்யா : அமைச்சர் அவர்கள் கூறினார் கள், சிறு விவசாயிகளுக்கு நிவாரணம் அளிப்பதுபற்றி அரசு பரிசீலித்து வருகிறது என்று. ஆனால் இன்று ஏராளமான நிலங்களை வைத்திருப்பவர்கள் அதற்கான மின் கட்டணத்தைக் கொடுக்க முடிந்தாலும் கூட சிறு விவசாயிகளோடு இணைத்துக் கொண்டு அவர்கள் பெயரால் இப்படி ஒரு கிளர்ச்சி நடத்தும் போது இந்தச் சிறு விவசாயிகளைப் பொறுத்தவரையில் இந்த அரசு அவர்கள் கோரிக்கையை அனுதாபத்துடன் கவனிக்கிறது என்று அதற்கு சீக்கிரத்தில் முடிவு செய்தால் இந்தப் பிரச்சினையை சுலபமாக்குவதற்கு வழி ஏற்படும். இதுபற்றி அரசாங்கம் கவனிக்குமா ?

[முற்பகல் 9-10]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுதான் உண்மையான நிலை. அரசாங்கம் இதுபற்றி விரைவில் முடிவு எடுக்கும்.

*திரு. செ. சதாசிவம் : இப்போதுள்ள மின் கட்டணத்தால் விவசாயிகள் மிகவும் அதிர்ச்சி அடைந்திருப்பதால், அது சம் பந்தப்பட்ட எல்லா விவசாயிகளுடைய குழுவைக் கூப்பிட்டுபேசி உடனடியாக தீர்த்துவைக்கும்படியான அளவில், அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அரசு தயாராக உள்ளது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற லைன் லாஸைத் தவிர்த்தாலே மின் கட்டணத்தைக் குறைக்க முடியும், அதை அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமாக மின் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று யோசனை செய்கின்ற நேரத்தில், கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் போய்விடுகிறது, இதன் காரணமாக அங்கு ஓடாமல் இருக்கும் மோட்டாருக்கும் குறைந்தபட்ச கட்டணம் செலுத்த வேண்டியிருக்கிறது. பல இடங்களில் வறட்சியால் கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் இருப்பதால், அப்படிப்பட்ட பகுதிகளிலுள்ள மோட்டார்களுக்கு கட்டணம் வசூலிப்பது நியாயமா? ஆகவே இதை ரத்து செய்ய அரசு முயலுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ரத்து செய்யக்கூடிய யோசனை எதுவுமில்லை.

திரு. ஆர். உமாநாத்: தலைவர் அவர்களே, சிறு நிலச்சொந்தக்காரர்களுக்கு மின்கட்டணத்தைக் குறைப்பதைப்பற்றி அனுதாபத்துடன் பரிசீலிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் அமைச்சர் அவர்களிடத்தில் ஒரு உத்திரவாதத்தை மட்டும் கேட்க விரும்புகிறேன். அதாவது பெரும் நிலச்சுவான்தார்களுக்கு இப்போது இருக்கும் கட்டணம் 16 பைசா என்பது குறைக்கப்படமாட்டாது என்கிற உத்திரவாதத்தைக் கொடுக்க முடியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கேள்வி நேரத்தில் உறுதிகள் தருவது இயலாது.

திரு. ஆர். உமாநாத்: நான் அமைச்சரிடம் கேட்டுக்கொள்ள விரும்புவது, பெரும் நிலப்பிரபுக்களுக்கு இப்போது இருந்து வரும் மின்கட்டணம் குறைக்கப்பட மாட்டாது என்ற யோசனையை அரசு பரிசீலிக்குமா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச.இராமச்சந்திரன்: நிச்சயமாக பரிசீலிக்கும்ப்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; கேள்வி எண் 3—மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படி தள்ளி வைக்கப்படுகிறது. வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு;— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]